அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 16/2013

எனது இலக்கம்:EST-7/LEAVE/03/3451
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07

2013.08.10

அமைச்சின் செயலாளர்கள்,
மாகான சபைகளின் தலைமைச் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்

**சர்வதேச/பல்தரப்பு நிறுவனமொன்றின் பதவிகளுக்காக இலங்கை அரசினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமனம் பெறும் அரச அலுவலர்களிற்கான விடுமுறைகளை வழங்குதல் - தாபன விதிக்கோவையின் XII ஆம் அத்தியாயம்**

தாபனவிதிக்கோவையின் XII அம் அத்தியாயத்தின் மீது தங்களது அவதானத்தைக் கோருகின்றோம்.

02. இலங்கை அரசில் உறுப்புரிமையினை வகிக்கும் சர்வதேச/பல்தரப்பு நிறுவனமொன்றின் பதவியொன்றிற்காக இலங்கை அரசினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமனம் பெறும் அரச அலுவலர் ஒருவரிட்கு மேற்படி பதவியை வகிக்கும் காலப்பகுதிக்காக சம்பளமற்ற விடுமுறையினை வழங்குவதற்கு 2013.05.09 ஆந்திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

03. அதற்கமைய தாபனவிதிக்கோவையின் XII அம் அத்தியாயத்தில் 38 ஆம் பிரிவாக கீழ்வரும் பிரிவினை உள்ளடக்கி திருத்தம் செய்யப்படுகின்றது.

38. இலங்கை அரசில் உறுப்புரிமையினை வகிக்கும் சர்வதேச/பல்தரப்பு நிறுவனமொன்றின் பதவியொன்றிற்காக இலங்கை அரசினால் பெயர் குறிப்பிடப்பட்டு நியமனம் பெறும் அரச அலுவலர் ஒருவரிட்கு மேற்படி பதவியை வகிக்கும் காலப்பகுதிக்காக சம்பளமற்ற விடுமுறையினை வழங்குதல்.

38.1 அவ்வாறான பதவியொன்றில் அரச அலுவலர் ஒருவர் சேவையாற்ற முடியுமான ஆகக்கூடிய காலம் ஐந்து வருடங்களாகும்.

38.2 மேற்படி குறிப்பிடப்பட்ட விடுமுறை காலத்தை அலுவலரின் உயிர்ப்பான சேவைக்காலமாக கணிக்கப்படவேண்டியதோடு அவர்களின் சேவைமூப்பு மற்றும் ஓய்வூதிய கணிப்பு என்பவற்றிற்கு தடையாக அமைதல் கூடாது.

04. இவ்வேற்பாடுகள் 2013.01.01 ஆந்திகதி முதல் நடைமுறைக்கு வரும்.

ஒப்பம்.பி.வீ.அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு